செ.வெ.எண்.25 நாள்.08.04.2017.

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், ராஜாக்கள்மங்கலம் ஊராட்சி, திருவேங்கடநாதபுரம் சிறுகுளம் உள்பட ஏழு குளங்களை ரூ.28 இலட்சம் மதிப்பில் டிவிஎஸ் நிறுவன நிதியுதவியின் மூலம் தூர்வாரும் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், ராஜாக்கள்மங்கலம் ஊராட்சி, திருவேங்கடநாதபுரத்தில் உள்ள சிறுகுளம் டிவிஎஸ் நிறுவன நிதியுதவியின் மூலம் தூர்வாரும் பணிகள் தொடக்க நிகழ்ச்சி இன்று (08.04.2017) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, தூர்வாரும் பணிகளை தொடங்கி வைத்தார்கள். முன்னதாக, ராஜாக்கள்மங்கலம் ஊராட்சி, சிறுமலஞ்சி ஒத்தப்பனை சுடலை ஆண்டவர் திருக்கோவிலில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் சுவாமி தரிசனம் செய்தார்கள்.

அப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது–

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி ஊராட்சி ஒன்றியத்தில் சிங்கநேரி கிராம ஊராட்சியில், சிங்கநேரி குளம், இலையார்குளம், ராஜாக்கள்மங்கலம் ஊராட்சியில் சிறுகுளம், இறைப்புவாரி ஊராட்சியில் புதுக்குளம், செண்பகராமநல்லூர் ஊராட்சியில் மேலவண்ணவனேரிகுளம், பாப்பன்குளம் ஊராட்சியில் பொத்தையடிகுளம், முனைஞ்சிப்பட்டி ஊராட்சியில் வண்ணான்குளம் ஆகிய ஊராட்சி ஒன்றிய கட்டுப்பாட்டிலுள்ள ஏழு சிறு பாசன குளங்களும் டிவிஎஸ் நிறுவனத்தின் நிதியுதவியுடன் மொத்தம் ரூ.28 இலட்சம் மதிப்பீட்டில் தலா 10 ஏக்கர் பரப்பளவில் தூர்வாரும் பணிகளை செய்திட அனுமதிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சிறு குளங்கள் ஆழமாக்கப்பட்டு நீர்பிடிப்பு அதிகரித்து விவசாயிகளுக்கு பேருதவியாக அமையும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, டிவிஎஸ் நிறுவன கள இயக்குநர் திரு.முருகன், விவசாய சங்கத் தலைவர் திரு.சூர்யகுமார், விவசாய சங்கப் பிரதிநிதிகள் திரு.தங்ககிருஷ்ணவேல், திரு.சுப்பிரமணியன், திரு.இசக்கியப்பன், வட்டாட்சியர் திரு.ஆதிநாராயணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி.கருணாவதி, திரு.பிச்சைமணி மற்றும் அலுவலர்கள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.